# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 36/2003

Deposition of P.W.-5 witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 14.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஹரிகரன் | Father's Name | : முத்துசாமி |
| Village | : ஆத்தூர் | Taluk | : ஆத்தூர் |
| Calling | : தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | Age | : 45 |

துவக்க நேரம் : 01.053P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் முதல் விசாரணை**:

1. நான் தற்பொழுது ஆத்தூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து மாவட்ட ஆட்சியருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவரது எழுத்து மூல உத்தரவின் அடிப்படையில் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் சர்வே எண். 75/3, 74/1, 73/7, 73/6, 73/10 மற்றும் 70/7 ஆகிய சர்வே எண்களில் உள்ள நிலங்கள் ராமநாயக்கன்பாளையம் நில கூட்டுறவு சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டதற்கு தொடர்பான 12 ஆவணங்களை ஒப்படைக்க கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

2. தற்பொழுது ராமநாயக்கன்பாளையம் கிராமத்தின் Re settlement பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்த ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக பதிவறையில் கிடைக்கப்பெறவில்லை என்பதற்கான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வழங்கிய அறிக்கையையும் தாக்கல் செய்கிறேன். அந்த அறிக்கை **Ex.X4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் நில குடியேற்ற சங்கம் துவங்கப்பட்டு மேற்கண்ட சர்வே எண்களில் உள்ள நிலங்கள் அந்த சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டது என்ற விவரமும், பின்னர் நில குடியேற்ற சங்கமும் கலைக்கப்பட்டது என்ற விவரமும் தெரியுமா என்றால் மேற்படி சங்கம் தொடர்பான பதிவேடுகள் இல்லையென்று மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நிலம் வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது தொடர்பான ஆவணங்கள் இல்லை. அழைப்பாணையில் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள கேட்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் நிரந்தர ஆவணங்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

**<u>1-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றாலும், அதனடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருக்க தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

1-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 2-ஆம் பிரதிவாதி தரப்பு ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.36/2003, Dt.14.11.2025.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்:01.32P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D. JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.36/2003, Dt.14.11.2025.